# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,

# கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவக

# (திருத்த)ச் சட்டம்

---

**[1981, மே மாதம் 7 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, *மே மாதம் 8 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** *வர்த்தமானப் பத்திரிகையின்* **II** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : சதம் 45** **தபாற் செலவு : சதம் 50**

**1981 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவக (திருத்த)ச் சட்டம்**

*[1981, மே மாதம் 7 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 17/80
1328

**1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவக (திருத்த) ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச்சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

'(1) (அ) தவிசாளராக இருக்க வேண்டிய கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரையும் ;

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களையும், அவர்களாவரெனின்—

(i) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(ii) காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(iii) காணி அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(iv) தேசிய திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(v) பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(vi) கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(vii) பெருந் தோட்டக் கைத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

2—ஏ 54706-6,375 (81/01)

(viii) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(ix) மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(x) உண்ணாட்டு வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(xi) இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(xii) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள கமத்தொழிற் போதனா பீடத்தின் பிரதிநிதியொருவர் :

ஆயின், இப்பந்தியின் (i) முதல் (x) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவை ஓர் அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது ஓர் அமைச்சரின் பொறுப்பில் இருக்கின்றவிடத்து, அப்போது, அத்தகைய விடயங்கள் தொடர்பில் ஒரு பிரதிநிதி மட்டுமே அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும்—

(i) நிறுவகப் பணிப்பாளர் ;

(ii) கமத்தொழிற் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iii) காணி ஆணையாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iv) கமநலச் சேவைகள் ஆணையாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(v) நீர்ப்பாசனப் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vi) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vii) கிராமிய அபிவிருத்திப் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ; அத்துடன்

(viii) உணவு, கமத்தொழில் ஒழுங்கமைப்பின் உள்ளூர் பிரதிநிதி அல்லது அவரது நியமத்தர்,

கொண்ட ஆளுநர் சபையொன்றை, (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகமானது கொண்டதாயிருத்தல் வேண்டும்.' ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"சபையுறுப்பினர்களின் பதவிக் காலம்

7. ஆறும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்புக் காரணமாக, பதவியை விட்டு விலகுவதன் காரணமாக அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக முன்னதாகவே அவரது பதவியை வறிதாக்கினுலொழிய, மூன்று ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"நிறுவகத்தின் உறுப்பினர்களது ஊதியமும் அவர்களது செலவுகளை மீளக் கொடுத்தலும்.

12. நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு, கூட்டங்களில் பங்குபற்றுவதற்கென, அமைச்சரின் அங்கீகாரத்துடன், நிறுவகத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன், நிறுவகத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ளும் நோக்கத்துக்காக அல்லது நிறுவகத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறுன நிறுவகத்தின் தொழிற்பாடுகளோடுறவுபட்ட அத்தகைய வேறு நோக்கத்துக்காக அவர்கள் உறக்கூடியவாறுன அத்தகைய போக்குவரத்து விடுதிச் செலவுகளும் இடைநேர் செலவுகளும் நிறுவகத்தினுல் உறுப்பினர்களுக்கு மீளக்கொடுக்கப்படுதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"துணைத் தவிசாளரை நியமித்தல், கூட்டங்களில் தலைமை தாங்குதல் முதலியன.

16. (1) அமைச்சரானவர், தவிசாளருடனுன ஆலோசனையுடன் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அமைச்சரினுல் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து துணைத் தவிசாளரொருவரை நியமிக்கலாம்.

(2) தவிசாளர் அல்லது அவர் இல்லாதபோது, துணைத் தவிசாளர் சபையின் கூட்டங்களில் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதோடு, தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகிய இருவருமே அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிராதபோது, சமுகமளித்திருக்

கும் உறுப்பினர்கள், தம்முள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) சபையினது கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கருமத்தின்மீதான அல்லது விடயத்தின் மீதான வாக்குகள் சமமானவையாக இருக்குமிடத்து, அத்தகைய கூட்டத்தின் தவிசாளர் அவரது வாக்குடன் கூட, இரண்டாவது அல்லது அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3அ) ஒழுக்காற்றுக் காரணங்கள் மீதல்லாது, வேறு விதமாக ஏதேனும் நேரத்தில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஆளொருவர், 19 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவராக இருக்குமிடத்து—

(அ) தொழில் இழப்பிற்கான நட்டஈடாக அவருக்கு ஆறு மாதச் சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின்கீழ் அளிப்பொன்றுக்கு அவர் தகுதியுடையவராக இருந்திருப்பாராயின், அப்போது, அத்தகைய அளிப்பின் நோக்கங்களுக்காக, அவர் வகித்த பணிப்பாளர் பதவி ஒழிக்கப்பட்டதன் காரணமாக, நிறுவகத்தின் பணியாட்டொகுதியில் அவரது தொழில் முடிவுறுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்குரிய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.